வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 998 /ஆ1 /2022, நாள் : 08.04.2022

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 – தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்ட (கட்டண) விதிகள், 2005–ன்படி நகலுக்கான கட்டணத்தை ஒரே அரசு கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்துதல் – தொடர்பாக.

பார்வை :

1. சென்னை–9, தலைமைச் செயலகம், மனிதவள மேலாண்மைத் (நி.சீ.III) துறை கடிதம் எண்.36916/நி.சீ.3/2021–1, நாள். 14.03.2022.
2. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ.3)த் துறை, நாள். 11.12.2020.
3. சென்னை–6, பொது தகவல் அலுவலர் / துணை இயக்குநர் (மின் ஆளுமை), பள்ளிக் கல்வி ஆணையரகம் கடிதம் ந.க.எண்.19492 /P/RTI/2022, நாள். 01.04.2022.

#######

பார்வையில் காணும் கடிதங்களுக்கிணங்க தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுதாரர்களிடமிருந்து பெறப்படும் கட்டணங்களை, தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை சட்ட (கட்டணங்கள்) விதி 2005–ன்படி செலுத்துவதற்கான கணக்குத் தலைப்பு குறித்து பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதம் வாயிலாக அறிவுறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், சில அரசு அலுவலகங்களிலுள்ள பொதுத்தகவல் அலுவலர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழான கட்டணங்களை, மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசுக் கணக்குத் தலைப்பில் செலுத்தாமல் வேறு பிற கணக்குத் தலைப்புகளைக் குறிப்பிட்டு அக்கணக்குத் தலைப்பில் செலுத்திய பிறகு ஆவண நகல்களை வழங்குவதாக அரசுக்கு புகார்கள் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களிடமிருந்து பெறப்படும் அனைத்துக் கட்டணங்களையும், பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசுக் கணக்குத் தலைப்பு.

(த.பி.பா.)

(ஆங்கில வடிவம்)

"0070. Other Administrative Services – 60 Other Services –
118 Receipts under Right to Information Act, 2005–AA–Collection
Of Fees under Right to Information (Fees) Rules, 2005–227 Non –
Taxation Fees – 39 Translation and Printing Fees"
(IFHRMS DPC: 0070 60 118 AA 22739)

(தமிழ் வடிவம்)

"0070 ஏனைய நிருவாகப் பணிகள் – 60 ஏனைய பணிகள் – 118 தகவல்
அறியும் உரிமைச் சட்டம் 2005–கீழ் வரவுகள்– AA தகவல் அறியும் உரிமைச்
சட்டம் 2005–ன் கீழ் பெறப்படும் கட்டணங்கள் – 227 வரியல்லாத
கட்டணங்கள் – 39 மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுக் கட்டணங்கள்"
(த.தொ.கு. 007060 118 AA22739)–இல்

மட்டுமே செலுத்துமாறு அனைத்து பொதுத் தகவல் அளிக்கும் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. மேற்படி, கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தாமல் வேறு ஏதேனும் கணக்குத் தலைப்பின் கீழ் கட்டணம் செலுத்தப்படுவதாக அரசுக்கு வரும் புகார்கள் ஒழுங்கீனமான நடவடிக்கையாக கருதப்படும் எனவும் பார்வைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் பார்வைக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுமாறு அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு– பார்வைக் கடிதம்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்,
வேலூர், வே.மா.
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை –
– மேற்கொள்ளும் பொருட்டும்)
நகல்.
அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

//ப.த.//

மனித வள மேலாண்மை (நி.சீ. III) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009.
பிலவ, மாசி-30
திருவள்ளுவர் ஆண்டு 2053

கடித எண். 36916 / நி.சீ.3 /2021 - 1, நாள் 14.03.2022

அனுப்புநர்
திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப.,
அரசு செயலாளர் (மு.க.பொ.)

பெறுநர்
தலைமைச் செயலக அனைத்து துறைகள்,
அனைத்துத் துறை தலைமைகள் மற்றும்
அனைத்து பொதுத் தகவல் அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 – தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்ட (கட்டண) விதிகள், 2005ன் படி நகலுக்கான கட்டணத்தை ஒரே அரசு கணக்கு தலைப்பின் கீழ் செலுத்துதல் – தொடர்பாக.

பார்வை: கடித எண்.19963/நி.சீ.3/2021-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ.3)த் துறை, நாள் 11.12.2020.

******

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுதாரர்களிடமிருந்து பெறப்படும் கட்டணங்களை, தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை சட்ட (கட்டணங்கள்) விதி 2005-ன்படி செலுத்துவதற்கான கணக்குத் தலைப்பு குறித்து பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள இத்துறையின் கடிதம் வாயிலாக, அனைத்து தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் அனைத்துத் துறை தலைமைகளுக்கும் அறிவுறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், சில அரசு அலுவலகங்களிலுள்ள பொதுத்தகவல் அலுவலர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழான கட்டணங்களை, மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தாமல் வேறு பிற கணக்குத் தலைப்புகளைக் குறிப்பிட்டு அக்கணக்குத் தலைப்பில் செலுத்திய பிறகு ஆவண நகல்களை வழங்குவதாக அரசுக்கு புகார்கள் வந்துள்ளன.

2. எனவே, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களிடமிருந்து பெறப்படும் அனைத்துக் கட்டணங்களையும், பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசு கணக்குத் தலைப்பான

[ஆங்கில வடிவம்]

"0070. Other Administrative Services – 60 Other Services – 118 Receipts under Right to Information Act, 2005 – AA – Collection of Fees under Right to Information (Fees) Rules, 2005 – 227 Non – Taxation Fees – 39 Translation and Printing Fees".
[IFHRMS DPC: 0070 60 118 AA 22739]

(தபியா.)

[தமிழ் வடிவம்]

"0070 ஏனைய நிருவாகப் பணிகள் – 60 ஏனைய பணிகள் – 118 தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 - கீழ் வரவுகள் – AA தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் பெறப்படும் கட்டணங்கள் – 227 வரியல்லாத கட்டணங்கள் – 39 மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுக் கட்டணங்கள்"
[த.தொ.கு. 0070 60 118 AA 22739] -இல்

மட்டுமே செலுத்துமாறு அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அனைத்துத் துறைத் தலைமைகள் மற்றும் அனைத்து பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. மேற்படி, கணக்குத் தலைப்பின்கீழ் செலுத்தாமல் வேறு ஏதேனும் கணக்குத் தலைப்பின் கீழ் கட்டணம் செலுத்தப்படுவதாக அரசுக்கு வரும் புகார்கள் ஒழுங்கீனமான நடவடிக்கையாக கருதப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

16/3/22

அரசு செயலாளருக்காக.

15/3/22

ந.க.எண்: 19492/P/RTI/2022.

நாள்: 01.04.2022

நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது. மேற்காண் அரசுக் கடிதத்தில் கூறிய அறிவுரைகளின்படி செயல்படுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

1/4/2022

பொதுத் தகவல் அலுவலர்/
துணை இயக்குநர் ([illegible]),
பள்ளிக்கல்வி ஆணையரகம், செ-6.

1/4/2022

பெறுநர்
முதன்மைக்கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டங்கள்.

நகல்
இயக்ககங்கள் அனைத்துப் [illegible].